கொடுக்கும்போது இது நடக்கிறது. அந்த நபர் வெளியரங்கமாக அந்நிய பாஷையில் பேசுகிறார், தொடர்ந்து வியாக்கியானம் கொடுக்கப் படுகிறது. ஆனால் தேவன் எல்லோரையும் இப்படிப் பயன்படுத்துவ தில்லை. எனவேதான் எல்லோரும் அந்நிய பாஷையில் பேசுவதில்லை என்று பவுல் எழுதியிருக்கிறார். தேவன் எல்லோரையும் பாஷைக்கு வியாக்கியானம் கொடுக்கும் வரத்தில் பயன்படுத்தாதிருப்பதுபோல, எல்லோரையும் பாஷைகளைப் பேசும் வரத்திலும் பயன்படுத்தாதிருக் கிறார். இதுவே ''எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா?'' என்ற பவுலின் கேள்வியை வேதாகமத்தின் எஞ்சிய பகுதியோடு ஒப்புரவாக்குவதற்கு ஒரே வழியாகும்.

பவுல் செய்ததுபோல எந்த வேளையிலும் என்னால் அந்நிய பாஷையில் பேச முடியும். எனவே நானோ அல்லது பவுலோ அந்நிய பாஷையில் பேசும்போது, ''ஆவியானவரின் சித்தப்படி மட்டுமே'' என்று சொல்ல மாட்டோம். அது நாங்கள் *சித்தம்கொள்ளும்போது* செய்வதாகும். எனவே நாங்கள் விரும்பிய போதெல்லாம் செய்வது ''ஆவியானவரின் சித்தப்படி மட்டுமே'' வரும் அந்நிய பாஷையில் பேசும் வரமாக *இருக்க முடியாது*. மேலும் என்னைப்போலவே பவுலும் தான் தனிமையில் இருக்கும்போது அந்நிய பாஷையில் பேசியிருக்கிறார், அதற்கு அர்த்தம் தெரியாமலிருக்கிறது. எனவே இதுவும் அவர் 1 கொரிந்தியரில் குறிப்பிட்டிருக்கும் அந்நிய பாஷை வரமாக *இருக்க முடியாது*. ஏனென்றால் எப்போதுமே அதைத் தொடர்ந்து பாஷைக்கு வியாக்கியானம் செய்யும் வரம் வரும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

அபூர்வமாகவே நான் பொதுவான கூட்டங்களில் அந்நிய பாஷையில் பேசியிருக்கிறேன். அப்படிச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் என்னை அசைப்பதை உணரும்போதுதான் அப்படிச் செய்திருக்கிறேன். ஆனால் கொரிந்தியர்களைப் போலவே என்னாலும் சபையில் அந்நிய பாஷையில் உரத்த குரலில் ஜெபிக்க முடியும், ஆனால் அதற்கு வியாக்கியானம் கொடுக்கப்பட மாட்டாது. இந்த வரத்தைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் என்னை அசைத்திருக்கும் வேளையில் எல்லாம் சபையாரின் பக்திவிருத்திக்காக வியாக்கியானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முடிவாக நாம் வேதாகமத்துக்கு இசைவான வகையில் அர்த்தம் காண வேண்டும். 1 கொரிந்தியர் 12:30 வசனத்தின் அடிப்படையில் எல்லா விசுவாசிகளும் அந்நிய பாஷையில் பேசக் கூடாது என்று சொல்லுபவர்கள் தங்கள் அர்த்தத்துக்கு இசைவாக இராத பல வேத வசனங்களைப் புறக்கணிக்கிறார்கள். இந்தப் பிழையின் காரணமாக தேவனிடமிருந்து வரும் ஒரு பெரிய ஆசீர்வாதத்தை இழந்து போகிறார்கள்.



# 12

# ஊழியத்தில் பெண்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சபையில் கிட்டத்தட்ட பாதிப் பேர் பெண்களாக இருக்கிறார்கள் என்பது பொதுவான அறிவாக இருக்கிறபடியால், சரீரத்துக்குள்ளாக தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பங்கை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசிய மாகும். பெரும்பாலான சபைகளிலும் ஊழியங்களிலும் பெண்கள் மதிப்புள்ள ஊழியர்களாக மதிக்கப்படுகிறார்கள். ஒட்டுமொத்த ஊழியத்தின் பெரும்பகுதியை அவர்கள் செய்கிறார்கள்.

ஆனால் எல்லோரும் பெண்களின் பங்கை ஒப்புக்கொள்ளு வதில்லை. சபைக்குள்ளாக பிரசங்கித்தல், தலைமைத்துவம் போன்ற சில ஊழிய அம்சங்களில் அவர்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். சில சபைகள் மட்டுமே பெண் போதகர்களை அனுமதிக்கின்றன, பல சபைகள் அனுமதிப்பதில்லை. சிலர் பெண்கள் போதிக்க அனுமதிக் கிறார்கள், மற்றச் சபைகள் அனுமதிப்பதில்லை. சிலர் ஆராதனைகளில் பெண்கள் பேசுவதை முழுவதுமாகக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

பெண்களின் பங்கைக் குறித்துப் பவுல் 1 கொரிந்தியர் 14:34–35 மற்றும் 1 தீமோத்தேயு 2:11–3:7 வசனங்களில் சொல்லியிருப்பதற்கு வெவ்வேறு வகையில் அர்த்தம் காண்பதே இந்தக் கருத்து வேறுபாடு களுக்குக் காரணமாகும். இந்த அத்தியாயத்தின் இறுதியில் இந்தப் பகுதிகளைக்குறித்துப் பார்ப்போம்.

### துவக்கத்திலிருந்து...

வேதாகமத்தின் முதல் பக்கங்களிலிருந்து பெண்களைக் குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் முதலில் பார்ப்போம். ஆண்களைப்போலவே பெண்களும் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக் கப்பட்டிருக்கிறார்கள்:

> தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் [ஆதி. 1:27].

தேவன் ஏவாளைச் சிருஷ்டிப்பதற்கு முன்பு ஆதாமைச் சிருஷ்டித்தார் என்பதை நாம் அறிவோம். பவுலைப் பொருத்த வரையில் இது ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு உண்மையாக இருக்கிறது [பார்க்க, 1 தீமோ. 2:3]. பவுல் விளக்கியிருக்கிறபடி இந்தச் சிருஷ்டிப்பின் வரிசையின் முக்கியத்துவத்தைக் குறித்து நாம் பின்னர் பார்ப்போம். இது ஆண் பெண்ணைவிட மேலானவன் என்பதை நிரூபிக்கவில்லை, ஏனென்றால் தேவன் மனிதனைப் படைப்பதற்கு முன்பாக மிருகங்களைப் படைத்திருக்கிறார் [பார்க்க, ஆதி. 1:24–28]. மிருகங்கள் மக்களைவிட மேலானவை என்று எவரும் விவாதிக்க முடியாது. [48]

தனது கணவனின் துணையாக இருக்கும்படி பெண் படைக்கப்பட்டிருக்கிறாள் [பார்க்க, ஆதி. 2:18]. இது திருமண உறவில் அவள் பங்கைக் குறித்து விவரிக்கிறதேயொழிய, அவள் கீழானவள் என்பதை நிரூபிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவியாக இருக்கும்படி கொடுக்கப்பட்டிருக்கிறார், ஆனால் அவர் நமக்குக் கீழானவர் அல்ல. மாறாக, பரிசுத்த ஆவியானவர் நம்மைவிட மேன்மையானவர்! தேவன் பெண்ணை அவளுடைய கணவனுக்குத் துணையாகப் படைத்ததிலிருந்து அவனுக்கு உதவி தேவைப்பட்டது என்பது நிரூபிக்கப்படுகிறது! மனிதன் தனித்திருக்கிறது அவனுக்கு நல்லதல்ல என்று தேவன்தாமே கூறினார் [பார்க்க, ஆதி. 2:18]. ஆண்கள் தங்களுக்கு உதவிசெய்ய மனைவிமார் இல்லாதிருந்த வேளையில் வரலாற்றில் இது எண்ணற்ற முறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இறுதியாக, வேதாகமத்தின் முதல் சில பக்கங்களிலிருந்து முதல் பெண் முதல் ஆணின் மாமிசத்திலிருந்து உருவாக்கப்பட்டாள் என்பதை அறிகிறோம். அவள் *அவனிலிருந்து* எடுக்கப்பட்டாள். இது அவளில்லாமல் அவன் ஏதோ இழந்திருக்கிறான் என்ற உண்மையையும், ஆதியில் இருவரும் ஒன்றாக இருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், தேவன் இவ்வாறு பிரித்திருப்பவர்கள் பாலுறவு ஐக்கியத்தின்மூலம் ஒன்றாக வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. வெறும் ஜனப்பெருக்கத்துக்காக மட்டுமில்லாமல், அன்புக்காகவும், பரஸ்பர இன்பத்தை அனுபவிப்பதற்காகவும் அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறார்கள்.

[48] ஆதாமுக்குப் பிறகு தேவன் பெண்ணைச் சிருஷ்டித்தபிறகு அந்தப் பெண்களுக்குப் *பிறகே* ஆண்கள் அவர்கள் மூலமாகப் பிறந்தார்கள். ஆதாமுக்குப் பின்வந்த ஒவ்வொரு ஆணும் ஒரு பெண் மூலமாகப் பிறந்தவன்தான் என்று பவுல் நமக்கு நினைவுபடுத்துகிறார் [1 கொரி. 11:11–12]. இந்தத் தெய்வீக ஒழுங்கு ஆண்கள் அவர்களுடைய தாயைவிடக் கீழானவர்கள் என்று நிரூபிக்கிறது என்று எவரும் விவாதிக்க முடியாது.





சிருஷ்டிப்பிலிருந்து நாம் அறியும் இந்த உண்மைகளிலிருந்து ஆண், பெண் இருவரில் எவரும் மற்றவர்களைவிட மேலானவர்கள் இல்லை, ஒருவர் மற்றவரை ஆளுகைசெய்யும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை என்பதை அறிகிறோம். தேவன் பெண்ணுக்காகத் திருமண உறவிலும் ஊழியத்திலும் வேறுபட்ட பங்கை ஏற்படுத்தியிருக்கிறபடியினால் பெண் ஆணைவிடக் குறைவானவள் என்று அர்த்தமில்லை. ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் ஆணென்றுமில்லை, பெண்ணென்றுமில்லை [கலா. 3:28].

## பழைய ஏற்பாட்டில் ஊழியத்தில் பெண்கள்

இந்த அஸ்திபாரத்தோடுகூட, தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றப் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்திய சில பெண்களைக் குறித்துப் பார்ப்போம். பழைய ஏற்பாட்டு வேளையைப் போலவே, புதிய ஏற்பாட்டு வேளையிலும் தேவன் ஆண்களையே பெரும்பாலும் ஊழியத்துக்காக அழைத்தார். மோசே, ஆரோன், யோசேப்பு, சாமுவேல், தாவீது போன்றவரின் வரலாற்றுச் செய்திகள் பழைய ஏற்பாட்டை நிரப்புகின்றன.

தேவன் தாம் விரும்பும் எவரையும் அழைத்துப் பயன்படுத்த முடியும் என்பதற்கு நிரூபணமாக அவர் பல பெண்களையும் அழைத்திருக்கிறார். அழைக்கப்பட்ட பணியைச் செய்யும்படி அவர்களைப் போதுமான அளவு பலப்படுத்தியுமிருக்கிறார்.

குறிப்பாக இவர்களில் எவரைப் பற்றியும் பார்ப்பதற்கு முன்பாக, பழைய ஏற்பாட்டில் தேவனால் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு பெரிய மனிதரும் பெண்ணிடத்தில் பிறந்து, பெண்ணாலேயே வளர்க்கப்பட்டார்கள் என்ற உண்மையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். யோகெபேத் இல்லாமல் மோசே வந்திருக்க முடியாது [பார்க்க, யாத். 6:20]. தேவனுடைய பெரிய மனிதர் எவரும் அவர்களுடைய தாய்மார் இல்லாமல் எழும்பியிருக்க முடியாது. கர்த்தருக்காகப் பிள்ளைகளை வளர்க்கும்படியான பாரமான பொறுப்பையும், பாராட்டுக்குரிய ஊழியத்தையும் தேவன் பெண்களுக்குக் கொடுத்திருக்கிறார் [பார்க்க, 2 தீமோ. 1:5].

யோகெபேத் தேவனால் அழைக்கப்பட்ட இரண்டு மனிதர்களாகிய மோசேக்கும், ஆரோனுக்கும் தாயாக இருந்தது மட்டுமல்லாமல், அவள் தேவனால் அழைக்கப்பட்டு தீர்க்கதரிசியாகவும், ஆராதனைத் தலைவியாகவும் இருந்த மீரியாமுக்கும் தாயாக இருந்தாள் [பார்க்க, யாத்.

15:20]. மீகா 6:4 வசனத்தில் தேவன் மீரியாமையும், மோசே, ஆரோன் இவர்களுடன் இஸ்ரவேலரின் தலைவர்களுள் ஒருவருவராக அங்கிகரிக்கிறார்:

> நான் உன்னை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்டிலிருந்த உன்னை மீட்டுக் கொண்டு, *மோசே ஆரோன் மீரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்* [அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

மீரியாமின் தலைமைத்துவம் மோசேயின் தலைமைத்துவத்தைப் போல ஆளுகைசெய்வதாக இல்லை என்பது உண்மைதான். என்றாலும், ஒரு தீர்க்கதரிசியாக அவள் தேவனுடைய சார்பில் பேசினாள். அவள் மூலமாக இஸ்ரவேலின் பெண்களுக்கு மட்டு மில்லாமல் ஆண்களுக்கும் தேவனுடைய செய்திகள் கொடுக்கப்பட்டன என்று நான் நம்புகிறேன்.

## இஸ்ரவேலருக்கு ஒரு பெண் நியாயாதிபதி

தேவன் இஸ்ரவேலில் தலைவராக எழுப்பிய மற்றொரு பெண் தெபொராள். இஸ்ரவேலரின் நியாயாதிபதிகளின் காலத்தில் இவள் வாழ்ந்தாள். இவள் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தது மட்டுமில்லாமல், கிதியோன், யெப்தா, சிம்சோன் இவர்களைப்போல இஸ்ரவேலரின் நியாயாதிபதியாகவும் இருந்தாள். ‘‘அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாயா விசாரணைக்குப் போவார்கள்’’ என்று நாம் வாசிக்கிறோம் [நியா. 4:5]. எனவே அவள் பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் ஆலோசனை கூறினாள். இதில் எந்தப் பிழையும் இல்லை: என்ன செய்ய வேண்டும் என்று ஒரு பெண் ஆண்களுக்குச் சொன்னாள், தேவன் அதற்காகவே அவளை அபிஷேகம் செய்திருந் தார்.

தேவன் தலைமைத்துவத்துக்கு அழைக்கும் பல பெண்களைப் போலவே தெபொராளும் ஒரு ஆணிடமிருந்து எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஒரு பெண்ணிடமிருந்து தேவனுடைய செய்தியைப் பெறுவது பாராக்குக்குக் கடினமாக இருந்தது. தெபொராளின் பேச்சைக் கேட்டு அவன் கானானியனாகிய சிசெராவுக்கு எதிர்த்துப் போரிடத் தயங்கினான். சிசெராவைக் கொல்லும் மகிமை ஒரு பெண்ணுக்கே செல்லும் என்று தெபொராள் பாராக்கிடம் கூறினாள். அவள் சொன்ன படியே யாகேல் என்ற பெண் சிசெராவின் நெற்றியில் ஆணியை அறைந்து அவனைக் கொன்றுபோட்டாள் [பார்க்க, யாத். 4]. பாராக் தெபொராளோடு சேர்ந்து ஒரு பாடலைப் பாடுவதோடு இந்த நிகழ்ச்சி முடிவடைகிறது! இந்தப் பாடலின் சில வரிகள் தொபொராளையும், யாகேலையும் பாராட்டுகின்றன [பார்க்க, யாத். 5]. எனவே பாராக்





இறுதியில் பெண்களின் ஊழியத்தை நம்புகிற ஒருவனாக ஆகிவிட்டான் என்பது தெரிகிறது.

## மூன்றாவது பெண் தீர்க்கதரிசி

பழைய ஏற்பாட்டில் அதிகமாக மதிக்கப்பட்ட பெண் தீர்க்கதரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது பெண் உல்தாள். யூதாவின் கலக்க மடைந்திருந்த ராஜாவாகிய யோசியா என்ற *ஆணுக்கு* அவள் நம்பத்தகுந்த தீர்க்கதரிசன விளக்கத்தையும், போதனையையும் கொடுத்தாள் [பார்க்க, 2 இரா. 22]. தேவன் ஒரு ஆணுக்குப் போதனையளிக்க ஒரு பெண்ணைப் பயன்படுத்துவதை நாம் மறுபடியுமாகக் காண்கிறோம். உல்தாள் இந்த ஊழியத்தை ஒழுங்காகச் செய்துவந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் யோசியா அவளுடைய வார்த்தைகளை எளிதாக ஏற்றுக்கொண்டிருக்க முடியாது.

தேவன் ஏன் மீரியாம், தொபொராள், உல்தாள் ஆகியவர்களைப் பெண் தீர்க்கதரிசிகளாக அழைத்தார்? அவரால் ஏன் ஆண்களை அழைத்திருக்க முடியாது?

இந்த மூன்று பெண்களும் செய்த ஊழியத்தைச் செய்ய தேவனால் ஆண்களையும் அழைத்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏன் என்று ஒருவருக்கும் தெரியாது. தேவன் யாரை ஊழியத்துக்காக அழைக்கிறார் என்பதில் அவரைக் கட்டுப்படுத்த முடியாது என்பதற்கு இது எடுத்துக்காட்டாக இருக்கிறது. தேவன் பழைய ஏற்பாட்டில் தலைமைப் பொறுப்புக்குப் பெரும்பாலும் ஆண்களையே தெரிந்தெடுத்தாலும், சில வேளைகளில் பெண்களையும் தெரிந்தெடுத்திருக்கிறார்.

இறுதியாக, பழைய ஏற்பாட்டில் இப்படி அழைக்கப்பட்ட பிரபலமான மூவரும் தீர்க்கதரிசிகளாக இருந்தார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். சில பழைய ஏற்பாட்டு ஊழியங்களுக்கு எந்தப் பெண்ணும் அழைக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக எந்தப் பெண்ணும் ஆசாரிய ஊழியத்துக்கு அழைக்கப்படவில்லை. இப்படியாகத் தேவன் சில ஊழியங்களை ஆண்களுக்காகவே ஒதுக்கி வைத்திருந்தார் என்பது தெரிகிறது.

## புதிய ஏற்பாட்டில் ஊழியத்தில் பெண்கள்

புதிய ஏற்பாட்டிலும், தேவனால் தீர்க்கதரிசியாக ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்ட பெண்ணைக் காண்கிறோம். இயேசு பிறந்து ஒருசில நாட்களில் அவர் யார் என்பதை அன்னாள் என்ற பெண் தீர்க்கதரிசி உணர்ந்து மேசியாவாகிய அவருடைய ஊழியத்தைக் குறித்து முன்னறிவித்தாள்:

> ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு *தீர்க்கதரிசி*

> இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி, ஆராதனைசெய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள் [லூக்கா 2:36–38 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

''எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த'' *யாவருக்கும்* இயேசுவைக் குறித்து அன்னாள் பேசினாள் என்பதைக் கவனியுங்கள். அப்படியானால் இது ஆண்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். அப்படியானால் அன்னாள் கிறிஸ்துவைக் குறித்து ஆண்களுக்குப் போதித்தாள் என்றே சொல்ல வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் வேறு பெண்களையும் தேவன் தீர்க்கதரிசன வரத்தில் பயன்படுத்தியிருக்கிறார். இயேசுவின் தாயாகிய மரியாளும் இந்தக் குழுவில் ஒருவர் [பார்க்க, லூக்கா 1:46–55]. மரியாளின் தீர்க்கதரிசன வார்த்தைகள் ஒவ்வொரு முறை சபை ஆராதனையில் வாசிக்கப்படும்போதும் ஒரு பெண் சபையில் போதிக்கிறாள் என்றே சொல்ல வேண்டும். [தேவன் ஒரு பெண்ணின் மூலமாகத் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பிப் பெண்மையைக் கௌரவித்திருக்கிறார். இதை அவர் வேறு எந்த வழிவகையிலாவது செய்திருக்கலாம்].

இப்படியாகப் பட்டியல் தொடர்ந்துகொண்டு போகிறது. தேவன் தமது ஆவியானவரை ஊற்றும்போது, இஸ்ரவேலின் குமாரர்களும் *குமாரத்திகளும்* தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் என்று தேவன் யோவேலின் மூலமாக முன்னறிவித்தார் [பார்க்க, யோவேல் 2:28]. யோவேலின் தீர்க்கதரிசனம் புதிய உடன்படிக்கையின் செயல்படுத்துதலுக்குப் பொருத்தமானது என்று பேதுரு உறுதிப்படுத்தியிருக்கிறார் [பார்க்க, அப். 2:17].

அப்போஸ்தலர் 21:8–9 வசனத்தில் சுவிசேஷகனாகிய பிலிப்புவுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லும் நான்கு குமாரத்திகள் இருந்தார்கள் என்று வாசிக்கிறோம்.

சபைக் கூடுகைகளில் பெண்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவதைக் குறித்துப் பவுல் எழுதியிருக்கிறார் [பார்க்க, 1 கொரி. 11:5]. இந்தப் பின்னணியில் ஆண்களும் இருந்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

தேவன் பெண்களைத் தீர்க்கதரிசிகளாகவும், தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கும் பயன்படுத்தியிருக்கிறார் என்பதற்கு இப்படி நாம் பல





வேதாகம எடுத்துக்காட்டுகளைக் காண்கிறோம். எனவே தேவன் இப்படிப்பட்ட ஊழியங்களில் பெண்களைப் பயன்படுத்துவார் என்பது தெளிவாகிறது. மேலும், தேவனுடைய சார்பாகப் பெண்கள் ஆண்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லக் கூடாது என்பதற்கு விரோதமான காரணம் எதுவுமில்லை என்பதையும் நாம் தெளிவாகக் கண்டிருக்கிறோம்.

### போதகர்களாகப் பெண்களா?

பெண்கள் போதகர்களாக ஊழியம் செய்வதைக் குறித்து என்ன? போதகர்/மூப்பர்/கண்காணி ஆகிய பொறுப்புக்கள் ஆண்களுக்குரியவை என்பதே தேவனுடைய நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

> கண்காணிப்பை விரும்புகிற*வன்* நல்ல வேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய *புருஷனும்*, ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்தபுத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும் [1 தீமோ. 3:1–2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே. குற்றஞ்சாட்டப்படாத*வனும்*, ஒரே மனைவியையுடைய *புருஷனும்*, துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம் [தீத்து 1:5–6 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்தப் பொறுப்பு பெண்களுக்குக் கொடுக்கப்படக் கூடாது என்று பவுல் வெளிப்படையாகச் சொல்லவில்லை. நாம் ஒரு தீர்மானமான முடிவை எடுக்கும்போது கவனமாகச் செயல்பட வேண்டும். இன்று உலகத்தில், குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகளில் எண்ணற்ற பெண்கள் போதகர்/மூப்பர்/கண்காணிகளாக இருக்கிறார்கள். என்றாலும்கூட, அவர்கள் சிறுபான்மையானவர்களாகவே இருக்கிறார்கள். ஒருவேளை தேவன் தமது ராஜ்யத்தின் நோக்கங்களுக்காகவோ அல்லது தலைமைத்துவத்துக்காக ஆண்கள் குறைவுபடும்போதோ பெண்களை இந்த ஊழியத்துக்கு அழைக்கலாம். இன்று கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள

பல பெண் போதகர்கள் தீர்க்கதரிசன ஊழியம் போன்ற பல ஊழியங்களுக்காக அழைக்கப்பட்டிருக்கலாம். என்றாலும், இப்போதைய சபை வடிவமைப்பில் அவர்கள் போதகர்களாக மட்டுமே ஊழியம் செய்ய முடிகிறது.

ஏன் போதகர்/மூப்பர்/கண்காணி பொறுப்பு ஆண்களுக்காகவே மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது? இந்தப் பொறுப்பின் செயல்பாடுகளை நாம் புரிந்துகொள்ளுவோமானால், இதையும் புரிந்துகொள்ளுவோம். போதகர்/மூப்பர்/கண்காணி குறித்த வேதாகமத் தகுதிகளில் ஒன்று இதுவாகும்:

> தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (1 தீமோ. 3:4–5).

ஒரு புதிய ஏற்பாட்டுக் கண்காணியானவர் ஒரு வீட்டுச் சபையைக் கண்காணித்தார் என்பதை நாம் அறியும்போது ஏன் இந்தத் தகுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுகிறோம். அவருடைய பொறுப்பு ஒரு தகப்பன் தன் வீட்டைக் கவனிப்பது போன்றதாகும். போதகர் பொறுப்பை ஏன் ஒரு ஆணே கொண்டிருக்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள இது நமக்கு உதவுகிறது. இது நிச்சயமாக ஒரு குடும்ப வடிவமைப்பைக் கொண்டிருக்கிறது. தேவனுடைய ஒழுங்கின்படி ஒரு குடும்பத்துக்கு மனைவி அல்ல, கணவனே தலையாக இருக்கிறான். இதைக்குறித்துப் பின்னர் அதிகமாகப் பார்ப்போம்.

### அப்போஸ்தலர்களாகப் பெண்களா?

ஒரு பெண் தேவனால் அழைக்கப்பட்டால் தீர்க்கதரிசன ஊழியத்தில் ஈடுபடலாம் என்பதை நாம் முடிவாகத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். மற்ற ஊழியங்களைக் குறித்து என்ன? தேவனுடைய ராஜ்யத்துக்காக ஊழியம் செய்து வந்த பல பெண்களுக்கு ரோமர் 16ஆம் அதிகாரத்தில் பவுல் வாழ்த்துதல் தெரிவிப்பதை நாம் பார்க்கும்போது அது அதிகத் தெளிவை நமக்குக் கொடுக்கும். அப்போஸ்தலராக ஒரு பெண் கூடப் பட்டியலிடப்பட்டிருக்கலாம். அடுத்துவரும் மூன்று மேற்கோள்களிலும் நான் பெண்களின் பெயர்களைச் சாய்வெழுத்தில் கொடுத்திருக்கிறேன்:

> கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி *பெபேயாளை* நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொண்டு, எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்; அவள் அநேகருக்கும் எனக்குங் கூட ஆதரவாயிருந்தவள் (ரோமர் 16:1–2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).





பவுல் எவ்வளவு அற்புதமாகப் பரிந்துரை செய்திருக்கிறார்! *பெபேயாள்* செய்துவந்த ஊழியம் எதுவென்று நமக்குத் தெரியாது. ஆனால் பவுல் அவளை ''கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரி'' என்று அழைத்திருக்கிறார். இவள் பவுல் உட்படப் பலருக்கும் ஆதரவாக இருந்திருக்கிறாள். பவுல் ரோமாபுரியிலிருந்த சபைக்கு அவளைக் குறித்துப் பரிந்துரை செய்திருக்கிறபடியால், அவள் எந்த ஊழியத்தைச் செய்தாலும் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கவேண்டும்.

அடுத்து *பிரிஸ்கில்லாளைப்* பற்றி நாம் வாசிப்போம். எல்லாப் புறஜாதிச் சபைகளும் பாராட்டும்படி இவள் தனது கணவனாகிய ஆக்கில்லாவோடு சேர்ந்து அற்புதமாக ஊழியம்செய்துவந்தாள்.

> கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய *பிரிஸ்கில்லாளையும்* ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள். அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய என் பிரியமான எப்பனெத்தை வாழ்த்துங்கள். எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட *மரியாளை* வாழ்த்துங்கள். அப்போஸ்தலருக்குள் பெயர்பெற்றவர்களும் எனக்கு முந்திக் கிறிஸ்துவுக்குள்ளானவர்களும் என் இனத்தாரும் என்னுடனேகூடக் காவலில் கட்டுண்டவர்களுமாயிருக்கிற அன்றோனீக்கையும் *யூனியா*வையும் வாழ்த்துங்கள் (ரோமர் 16:3–7 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

யூனியாவைப் பொருத்தவரையில் அவள் அப்போஸ்தலர்களுக்குள் பெயர்பெற்றவளாக இருந்தாள் எனவே அவள் தானும் அப்போஸ்தலராகவே இருக்க வேண்டும். யூனியா என்ற பெயர் ஒரு பெண்ணையே குறிக்கிறது. *பிரிஸ்கில்லாளும் மரியாளும்* ஆண்டவருக்காக ஊழியம் செய்துவந்தார்கள்.

கர்த்தருக்குள் எனக்குப் பிரியமான அம்பிலியாவை வாழ்த்துங்கள். கிறிஸ்துவுக்குள் நம்மோடே உடன் வேலையாளாகிய உர்பானையும், என் பிரியமான ஸ்தாக்கியையும் வாழ்த்துங்கள். கிறிஸ்துவுக்குள் உத்தமனாகிய அப்பெல்லேயை வாழ்த்துங்கள். அரிஸ்தொபூலுவின் வீட்டாரை வாழ்த்துங்கள். என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள். நர்கீசுவின் வீட்டாரில் கர்த்தருக்குட்பட்டவர்களை வாழ்த்துங்கள். கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற *திரிபேனாளையும், திரிபோசாளையும்* வாழ்த்துங்கள். கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான *பெர்சியாளை* வாழ்த்துங்கள். கர்த்தருக்குள் தெரிந்து கொள்ளப்பட்ட ரூபையும், எனக்கும் *தாயாகிய* அவனுடைய *தாயையும்* வாழ்த்துங்கள். அசிங்கிரீத்து வையும், பிலொகோனையும், எர்மாவையும், பத்திரொ பாவையும், எர்மேயையும், அவர்களோடிருக்கிற சகோதரரையும் வாழ்த்துங்கள். பிலெலோகையும், *யூலியாளையும்*, நேரேயையும், அவனுடைய *சகோதரி யையும்*, ஒலிம்பாவையும், அவர்களோடிருக்கிற பரிசுத்த வான்களெல்லாரையும் வாழ்த்துங்கள் [ரோமர் 16:8–15 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

பெண்கள் ஊழியத்தில் ''செயல்படுகிறவர்களாக'' இருக்க முடியும் என்பது தெளிவாகிறது.

### உபதேசியார்களாகப் பெண்களா?

பெண் உபதேசியார்களைக் குறித்து என்ன? புதிய ஏற்பாடு எவரையும் குறிப்பிடவில்லை. போதிக்கும்படி அழைக்கப்பட்ட ஆண்களைக் குறித்தும்கூடப் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்க வில்லை. ஆக்கில்லாவின் மனைவியாகிய பிரிஸ்கில்லாள் [மேலே குறிக்கப்பட்டிருக்கிறவள்] ஒரு சிறிய அளவில் போதிப்பதில் ஈடுபட்டிருந்தாள். எடுத்துக்காட்டாக, அவளும் ஆக்கில்லாவும் எபேசு பட்டணத்தில் அப்பொல்லோ முழுமையான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவில்லை என்று கேள்விப்பட்டபோது, ''அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்'' [அப். 18:26]. ஒரு ஆணாகிய அப்பொல்லோவுக்குத் தன் கணவன் போதிப்பதில் பிரிஸ்கில்லாளும் உதவிசெய்திருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. மேலும் பவுல் இரண்டு முறை பிரிஸ்கில்லாள் ஆக்கில்லாவின் வீட்டில் கூடிவரும் சபையைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார் [பார்க்க, ரோமர் 16:3–5; 1 கொரி.





16:19]. ரோமர் 16:3 வசனத்தில் அவர் இருவரையும் கிறிஸ்துவுக்குள் தன் உடன்வேலையாட்கள் என்று அழைக்கிறார். தனது கணவனோடு கூடப் பிரிஸ்கில்லாளும் ஊழியத்தில் நேரடியாகத் தொடர்புகொண்டி ருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

### பெண்கள் ஆண்களுக்குப் போதிக்கும்படி இயேசுவானவர் *கட்டளையிட்டபோது...*

சபையில் பெண்கள் மௌனமாக இருக்க வேண்டும் என்றும், பெண்கள் ஆண்களுக்குப் போதிக்கக்கூடாது என்றும் பவுல் போதித் திருப்பதைப் பார்ப்பதற்கு முன்பாக, இவைகளைச் சமப்படுத்த நமக்கு உதவும் மற்றொரு வேதாகமப் பகுதியைப் பார்ப்போம்.

இயேசுவானவர் உயிரோடு எழுந்தபோது, ஒரு தூதன் இயேசுவின் ஆண் சீஷர்களுக்குப் போதிக்கும் பொறுப்பைக் குறைந்தபட்சம் மூன்று பெண்களுக்குக் கொடுத்தான். இயேசுவானவர் உயிர்த்தெழுந்தார் என்றும், அவர் கலிலேயாவில் அவர்களைச் சந்திப்பார் என்றும் இவர்கள் அவருடைய சீஷர்களிடம் போய்ச் சொல்ல வேண்டும். அது மட்டுமல்ல. சிறிது நேரம் கழித்து இயேசுவானவர் தாமே அதே பெண்களுக்குக் காட்சியளித்து, கலிலேயாவுக்குச் செல்லும்படி சீஷர்களுக்குப் போதிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார் [பார்க்க, மத். 28:1–10; மாற்கு 16:1–7].

முதலாவதாக, இயேசுவானவர் முதலில் ஆண்களுக்குக் காட்சி யளிக்காமல் பெண்களுக்குக் காட்சியளிப்பதைத் தெரிந்துகொண்டது முக்கியத்துவம் வாய்ந்ததாக நான் நினைக்கிறேன். இரண்டாவதாக, பெண்கள் ஆண்களுக்குப் போதிப்பது அடிப்படையிலோ அல்லது நல்லொழுக்கநீதியிலோ தவறானது அல்ல என்பது தெரிகிறது. இல்லா விட்டால், தமது உயிர்த்தெழுதலைப் பற்றி ஆண்களுக்குப் போதிக்கும்படி இயேசு பெண்களுக்குக் கட்டளையிட்டிருக்க மாட்டார். இந்த நிகழ்ச்சி முக்கியத்துவமில்லாததுமில்லை, மேலும் இயேசு வானவர்தாமே இதைக் கொண்டு சென்றிருக்கலாம் [பின்னால் அவர் அதைச் செய்தார்]. இந்த உண்மையைக் குறித்து எவரும் விவாதிக்க முடியாது: ஒரு முக்கியமான சத்தியத்தைப் போதிக்கும்படியாகவும், ஆண்களுக்குச் சில ஆவிக்குரிய காரியங்களைச் சொல்லும்படியாகவும் ஆண்டவராகிய இயேசு சில பெண்களுக்குப் பொறுப்பைக் கொடுத்தார்.

### பிரச்சினைக்குரிய பகுதிகள்

ஊழியத்தில் பெண்களின் பங்கைக் குறித்து வேதாகமம் சொல்லுவதை இப்போது நாம் அறிந்துகொண்டோம். இப்போது நம்மால் பவுலின் எழுத்துக்களிலுள்ள ''பிரச்சினைக்குரிய பகுதிகளுக்கு'' அர்த்தம் காண முடியும். முதலில் பெண்கள் சபையில் மௌனமாக

இருக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கும் பகுதியைப் பார்ப்போம்:

> சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே [1 கொரி. 14:34–35].

முதலாவதாக, இது பவுலின் போதனைகள்தானா அல்லது கொரிந்தியர் அவருக்கு எழுதியிருந்ததை அவர் மேற்கோளாக எடுத்துச் சொல்லுகிறாரா என்று சிலர் கேள்வியெழுப்பியிருக்கிறார்கள். கொரிந்தியர் ஒரு கடிதத்தின்மூலம் தன்னிடம் கேட்ட கேள்விகளுக்குப் பவுல் நிருபத்தின் இரண்டாவது பாதியில் பதிலளிக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது [பார்க்க, 1 கொரி. 7:1, 25; 8:1; 12:1; 16:1, 12].

இதோடுகூட அடுத்த வசனத்தில், பெண்களைச் சபையில் மௌனமாக இருக்கச் சொல்லும் கொரிந்தியரின் கொள்கையைக் குறித்த தனது பதிலைச் சொல்லுகிறார்:

> தேவவசனம் உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது உங்களிடத்துக்கு மாத்திரமா வந்தது? [1 கொரி. 14:36].

கொரிந்தியரின் மனோபாவத்தைக் குறித்துப் பவுல் வியப்படைவதை இந்தக் கேள்விகள் வெளிப்படுத்துகின்றன.

எப்படியிருப்பினும், பவுல் இரண்டு கேள்விகளைக் கேட்கிறார் என்பது தெளிவாகும். இரண்டுக்கும் பதில் *இல்லை* என்பதாகும். கொரிந்தியர்களிடமிருந்து தேவ வசனம் புறப்படவில்லை, அது மட்டுமல்ல அது அவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படவில்லை. அவர்களுடைய பெருமையைக் கடிந்துகொள்ளவே பவுல் இந்தக் கேள்விகளை எழுப்புகிறார். இதற்கு முன்பாக இருக்கும் இரண்டு வசனங்களைக் குறித்த அவருடைய எதிர்ச்செயலாக இந்த வசனம் இருக்குமானால் அது இப்படி அர்த்தப்படுகிறது: ''உங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தேவன் தம்முடைய வார்த்தையை யாரைக் கொண்டு பேச வேண்டும் என்று கட்டளையிட நீங்கள் யார்? தேவன் விரும்பினால் அவர் பெண்களைப் பயன்படுத்தலாம், அவர்களை நீங்கள் மௌனமாக இருக்கச் சொல்லுவது மூடத்தனமாகும்.''

பவுல் ஏற்கெனவே இந்த நிருபத்தில் சபையில் பெண்கள் தீர்க்கதரிசனம் சொல்லும் சரியான வழி எதுவென்று சொல்லியிருக்கிற





படியால் [பார்க்க, 1 கொரி. 11:5] இப்போதைய நமது அர்த்தம் காணுதல் சரியாகவே இருக்க வேண்டும். பெண்கள் தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்றால் அவர்கள் மௌனமாக இருக்க *முடியாது*. மேலும் இப்போது நாம் ஆராய்ந்துகொண்டிருக்கும் வசனத்துக்குச் சில வசனங்கள் கழித்து, பெண்கள் உட்பட கொரிந்தியர்கள் எல்லோரும்[49] ''தீர்க்கதரிசனஞ்சொல்ல'' நாட வேண்டும் என்று போதித்திருக்கிறார் [1 கொரி. 14:39]. அப்படியானால் அவர் 14:34–35 வசனங்களில் பெண்கள் மௌனமாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதற்கு இவை முரண்பாடானவைகளாகக் காணப்படுமே?

### மற்ற சாத்தியக் கூறுகள்

ஒரு கண நேரத்துக்கு 1 கொரிந்தியர் 14:34, 35 வசனங்களில் பவுலின் சொந்த வார்த்தைகள் என்று வைத்துக்கொள்ளுவோம். அதாவது பெண்கள் மௌனமாக இருக்க வேண்டும் என்று அவர் போதிக்கிறார். பிறகு எப்படி நாம் அவர் கூறுவதற்கு வியாக்கியானம் சொல்ல வேண்டும்?

சபை கூடிவரும்போது பெண்கள் ஜெபிக்கலாம், தீர்க்கதரிசனம் சொல்லலாம் என்று அவர் இந்த நிருபத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கும்போது, பிறகு ஏன் அவர் பெண்கள் மௌனமாக இருக்க வேண்டும் என்ற ஒட்டுமொத்தக் கட்டளையைக் கொடுக்க வேண்டும்?

மேலும், ஏற்கெனவே தேவன் தமது வார்த்தையை வெளியில் பேசும்படி, பெண்களைப் பயன்படுத்திருக்கும் எடுத்துக்காட்டுளைப் பவுல் அறிந்திருக்க வேண்டும். பிறகு ஏன் தேவன் பேசும்படி அபிஷேகம் செய்திருப்பவர்களைப் பவுல் மௌனமாயிருக்கும்படி சொல்ல வேண்டும்?

சபை கூடிவரும்போது பெண்கள் *முழுவதுமாக* மௌனமாக இருக்க வேண்டுமென்று பவுல் சொல்லியிருக்க முடியாது என்பதைப் பொது அறிவிலிருந்தே அறிய முடிகிறது. துவக்ககாலச் சபை வீடுகளில் கூடி வந்தது என்பதையும், அவர்கள் உணவைப் பகிர்ந்து உண்டார்கள் என்பதையும் நினைவுகூருங்கள். பெண்கள் அந்த வீட்டில் நுழைந்ததிலிருந்து வெளியேறும் வரையில் பேசாமலே இருந்தார்கள் என்று நாம் நினைக்க வேண்டுமா? அவர்கள் பொதுவான உணவைத் தயாரிக்கும் போதோ அல்லது அதைச் சாப்பிடும்போதோ பேசாமல் இருக்க முடியுமா? இந்த முழு நேரத்திலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளிடம்கூட ஒன்றும்

[49] பவுல் ''சகோதரரே'' என்று அழைத்து இந்தப் போதனையைக் கொடுக்கிறார். இந்தச் சொல்லை அவர் இந்த நிருபத்தில் 27 முறை பயன்படுத்தியிருக்கிறார். இது பெண்களை மட்டுமல்ல, கொரிந்து சபையார் எல்லோரையும் குறிப்பிடுகிறது என்பது தெளிவாகும்.

சொல்லாமல் இருக்க முடியுமா? இப்படிப்பட்ட சிந்தனை அபத்தமாக இருக்கிறது.

இயேசுவின் நாமத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் கூடியிருந்தால் அவர் அவர்களின் நடுவே இருக்கிறார் [பார்க்க, மத். 18:20]. இப்படியாக இது சபைக்கூடுகையாக ஆகிறது. இரண்டு பெண்கள் இயேசுவின் நாமத்தில் கூடிவருவார்கள் என்றால், அவர்கள் ஒருவர் மற்றவரோடு பேசக் கூடாதா?

1 கொரிந்தியர் 14:34, 35 வசனங்கள் பவுலின் போதனையாக இருக்குமானால், கூடாது என்பதே பதிலாகும். அவர் சபையில் ஒழுக்கம் குறித்து எழுந்த ஒரு சிறிய பிரச்சினைக்கே பதிலளிக்கிறார். சில பெண்கள் ஒழுங்கில்லாமல் கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பெண்கள் கூட்டம் முழுவதிலும் முழுவதுமாக மௌனமாக இருக்க வேண்டும் என்பது பவுல் குறிப்பிட்டதின் அர்த்தம் அல்ல. சில வசனங்களுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட வேண்டிய ஒழுங்கைக் குறித்துப் பேசும்போதும், அவர் தீர்க்கதரிசனம் சொல்லுபவர்கள் முழுக் கூட்டத்திலும் மௌனமாக இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

> அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், *முந்திப் பேசினவன் பேசாமலிருக்கக்கடவன்* [1 கொரி. 14:30 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

''பேசாமலிருக்கக்கடவன்'' என்றால் ''தாற்காலிகமாகப் பேசாமலிருக்கக்கடவன்'' என்று அர்த்தமாகும்.

அந்நிய பாஷைகளில் பேசுபவர்களும் சபையில் வியாக்கியானம் கொடுப்பவர்கள் எவரும் இல்லாவிட்டால் மௌனமாக இருக்க வேண்டும் என்றும் பவுல் சொல்லியிருக்கிறார்:

> அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், *சபையிலே பேசாமல்,* தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன் [1 கொரி. 14:28 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இப்படிப்பட்டவர்கள் *முழுக் கூட்டத்திலும் முழுமையாக* மௌனமாக இருக்க வேண்டும் என்பதுதான் பவுலின் நோக்கமாகுமா? இல்லை, அர்த்தம் சொல்லுகிறவர்கள் இல்லாவிட்டால் அவர்கள் அந்நிய பாஷையில் பேசாமல் மௌனமாக இருக்கவேண்டும் என்றே பவுல் சொல்லுகிறார். 1 கொரிந்தியர் 14:34, 35 வசனங்களில் அவர் பெண்களுக்குக் கொடுத்த அதே அறிவுரையை – ''சபையிலே பேசாமல்'' இருக்கும்படி இங்கேயும் அவர் சொல்லுவதைக் கவனியுங்கள். அப்படியானால், பெண்கள் சபையிலே பேசாமல் இருக்க





வேண்டும் என்று பவுல் சொல்லுவதை ''முழுக்கூட்டத்திலும் மௌனமாக இருக்க வேண்டும்'' என்று அவர் சொல்லுவதாக அர்த்தம் கொள்ள வேண்டும்? ஒழுங்கில்லாமல் அந்நிய பாஷை பேசுகிறவர்கள் மட்டும் ''கூட்டத்தில் சில குறிப்பிட்ட வேளைகளில் மட்டும் பேசாமல் இருக்க வேண்டும்'' என்று அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும்? ஒரே சொற்றொடருக்கு இப்படி இரண்டு அர்த்தங்களை எடுத்துக் கொள்ளலாமா?

இறுதியாக, பவுல் *எல்லாப்* பெண்களுக்கும் இந்த அறிவுரையைக் கொடுக்கவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவருடைய இந்த வார்த்தைகள் திருமணமான பெண்களுக்கு மட்டுமே உரியதாகும். ஏனென்றால் அவர் அவர்களுக்குக் கேள்விகள் இருக்குமானால் ''வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது.[50] திருமணமான பெண்கள் தங்கள் *சொந்தக்* கணவரல்லாத மற்ற ஆண்களிடம் கேள்வியெழுப்பிக்கொண்டிருந்ததே பிரச்சினையாக இருந்தது என்று தெரிகிறது. இப்படிப்பட்டதொரு சூழ்நிலை பொருத்தமில்லாததாகவே கருதப்பட்டிருக்க வேண்டும். இது ஓரளவுக்குத் தங்கள் கணவரை மரியாதையில்லாமல் நடத்துவதாகவும், கணவருக்குக் கீழ்ப்படியமாமல் இருப்பதாகவும் காணப்படுகிறது. இந்தப் பிரச்சினை குறித்தே பவுல் பேசிக்கொண்டிருக்கிறார் என்பதினால்தான் மனைவி கணவனுக்குக் கீழ்ப்படடிருக்க வேண்டும் என்ற பிரமாணத்தை எடுத்துச் சொல்லுகிறார். ஆதியாகமத்திலிருந்து பல வழிகளிலும் இந்தப் பிரமாணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது [பார்க்க, 1 கொரி. 14:34].

சுருக்கமாகப் பார்ப்போமானால், 1 கொரிந்தியர் 14:34–35 வசனங்களில் பவுல் பெண்கள் மௌனமாக இருக்க வேண்டும் என்ற போதிக்கும்போது அவர் திருமணமான பெண்கள் பொருத்தமில்லாத வேளைகளில் கேள்விகளைக் கேட்பதைக் குறித்தும், தங்கள் கணவனுக்கு அவமரியாதை உண்டாக்கும் வகையில் பேசுவதைக் குறித்துமே அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார் என்பது தெளிவாகிறது. மற்றபடி அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லலாம், ஜெபிக்கலாம், பேசலாம்.

### பிரச்சினைக்குரிய மற்றொரு பகுதி

இறுதியாக, பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய முதலாம் நிருபத்திலுள்ள இரண்டாவது ''பிரச்சினைக்குரிய பகுதிக்கு'' வருகிறோம்.

[50] மூல கிரேக்க மொழியில் *பெண்ணையும் மனைவியையும், ஆணையும் கணவனையும்* வேறுபடுத்திக் காட்ட வார்த்தைகள் இல்லை என்பதைக் கவனிக்க வேண்டும். எனவே பின்னணியிலிருந்தே எழுதுபவர் ஆணையும் பெண்ணையும் குறிக்கிறாரா, அல்லது கணவனையும் மனைவியையும் குறிக்கிறாரா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். நாம் ஆராயும் பகுதியில் பவுல் மனைவிகளைப் பற்றிச் சொல்லுகிறார், அவர்கள் மட்டுமே தங்கள் கணவன்மாரிடம் வீட்டில் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்.

ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக் கடவள்.

> உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும். என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப் பட்டாள். மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள். அப்படியிருந்தும், தெளிந்தபுத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலை கொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றினாலே இரட்சிக்கப் படுவாள் (1 தீமோ. 2:11—14).

தேவனுடைய சார்பாக ஆண்களோடும் பெண்களோடுமே பேசி, தேவனுடைய சித்தத்தை ஆற்றலோடு பேசிய நான்கு பெண் தீர்க்கதரிசிகளாகிய அன்னாள், தெபொராள், உல்தாள், மிரியாம் ஆகியோரைப் பவுல் கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டும். இஸ்ரவேலருக்கு நியாயாதிபதியாக இருந்த தெபொராள் ஆண்கள், பெண்களின்மீது ஓரளவு அதிகாரத்தைச் செலுத்தினாள் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். பெந்தெகொஸ்தே நாளன்று தேவன் தமது பரிசுத்த ஆவியானவரை அருளியபோது, கடைசி நாட்களில் தேவன் மாம்சமுள்ள எல்லார்மேலும் தமது ஆவியை ஊற்றுவார், குமாரர்களும் *குமாரத்திகளும்* தேவனுடைய வார்த்தையைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுவார்கள் என்ற யோவேலின் தீர்க்கதரிசனம் நிறைவேறி யிருந்ததை அவர் அறிந்திருக்க வேண்டும். இயேசுவானவர் தமது ஆண் சீஷர்களுக்குச் செய்திகொடுக்கச் சில பெண்களை அனுப்பினார் என்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். பெண்கள் சபைக்கூடுகை களின்போது ஜெபிப்பதையும், தீர்க்கதரிசனம் சொல்லுவதையும் குறித்து அவர் தாமே கொரிந்தியருக்கு எழுதிய வார்த்தைகளை மறந்திருக்க முடியாது. கொரிந்தியர்களுக்கு அவர் எழுதும்போது, அவர்களில் எவரும் சபையாரோடு பகிர்ந்துகொள்ளும்படி தேவனிடமிருந்து செய்தியைப் பெறலாம் என்று எழுதியதை மறந்திருக்க முடியாது (பார்க்க, 1 கொரி. 14:26). அப்படியானால் அவர் இந்த வார்த்தை களைத் தீமோத்தேயுவுக்கு எழுதியபோது அவர் தெரிவிக்க விரும்பிய காரியம் என்ன?

பவுல் தனது அறிவுரைக்கு அடிப்படையாக ஆதியாகமத்தில் ஒன்றோடொன்று தொடர்புடைய இரண்டு உண்மைகளை எடுத்துச் சொல்லுவதை நாம் கவனிக்கலாம். 1) ஆதாம் ஏவாளுக்கு முன்பாகச் சிருஷ்டிக்கப்பட்டான். 2) ஆதாம் அல்ல, ஏவாளே வஞ்சிக்கப்பட்டு,





மீறுதலுக்குள்ளானாள். முதல் உண்மை கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயுள்ள சரியான உறவை உறுதிப்படுத்துகிறது. சிருஷ்டிப்பின் வரிசையின் மூலமாக, கணவன் தலையாக இருக்கிறான். இதைக் குறித்துப் பவுல் வேறு இடத்திலும் போதித்திருக்கிறார் (பார்க்க, 1 கொரி. 11:3; எபே. 5:23—24).

இரண்டாவது உண்மை பெண்களே ஆண்களைவிட மிக எளிதாக வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பதை வலியுறுத்துவதற்காகச் சொல்லப்பட வில்லை. ஏனென்றால் அது அப்படியிருக்கவில்லை. உண்மையில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாக இருக்கிறபடியால், ஆண்கள் எளிதாக வஞ்சிக்கப்படக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்று வாதிடலாம். மாறாக, குடும்ப ஒழுங்கைக் குறித்துத் தேவன் நிறுவியது புறக்கணிக்கப்படுமானால், சாத்தான் உள்ளே நுழைய ஏதுவுண்டாகும் என்பதையே இரண்டாவது உண்மை காட்டுகிறது. ஏதேன் தோட்டத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயுள்ள உறவின் ஒழுங்கு புறக்கணிக்கப்பட்டிருந்தபடியினால் தான் — ஆதாமின் மனைவி அவனுக்குக் கீழ்ப்பட்டவளாக இருக்க வில்லை — மனுக்குலத்தின் முழுப் பிரச்சினையும் துவங்கியது. விலக்கப்பட்ட கனியைக் குறித்த தேவனுடைய அறிவுரைகளை ஆதாம் கண்டிப்பாகத் தன் மனைவிக்குச் சொல்லியிருக்க வேண்டும் (பார்க்க, ஆதி. 2:16—17; 3:2—3). ஆனால் அவள் அவனுடைய அறிவுரையைப் பின்பற்றவில்லை. உண்மையில் அவள் அவனிடம் விலக்கப்பட்ட கனியைக் கொடுத்தபோது, அவள் அவன்மீது அதிகாரம் செலுத்தினாள் (பார்க்க, ஆதி. 3:6). இங்கே ஆதாம் ஏவாளை வழிநடத்தவில்லை, ஏவாளே ஆதாமை வழிநடத்தினாள். அழிவே இதன் விளைவாக இருந்தது.

### சபை — குடும்பத்தின் மாதிரி

குடும்பத்துக்காகத் தேவன் கொண்டிருக்கும் ஒழுங்கு சபையிலும் செயல்படுத்தப்பட வேண்டும். நான் ஏற்கெனவே கூறியபடி, சபை வரலாற்றில் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குச் சபைகள் சிறியதாகவே இருந்தன. அவர்கள் வீடுகளில் கூடிவந்தார்கள். போதகர்/மூப்பர்/கண்காணிகள் குடும்பங்களின் தகப்பன்மாரைப்போல இருந்தார்கள். தேவனால் ஒழுங்குபடுத்தப்பட்ட சபையின் வடிவமைப்பு, குடும்பத்தின் மாதிரியை அதிகமாகக் கொண்டிருந்தது. உண்மையில், அது ஒரு ஆவிக்குரிய குடும்பமாகவே இருந்தது. இதில் பெண்கள் தலைமைப் பொறுப்பை ஏற்பது என்பது சபைக்குள்ளும் சபைக்கு வெளியேயும் குடும்பங்களுக்குத் தவறான செய்தியையே கொடுக்கும். ஒரு வீட்டுச் சபையில் பெண் போதகர்/மூப்பர்/கண்காணி ஒழுங்காகப் போதிப்பதைக் கற்பனைசெய்து பாருங்கள். கணவன் அங்கே கீழ்ப்படிதலோடு அமர்ந்திருந்து, அவளுடைய போதனைக்குச் செவிகொடுத்து,

அவளுடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும். இது குடும்பத்தைக்குறித்த தேவனுடைய ஒழுங்குக்கு விரோதமானதாகும். இது தவறான முன்மாதிரியையே கொடுக்கிறது.

இதைத்தான் பவுலின் வார்த்தைகள் குறிப்பிடுகின்றன. மூப்பர்களின் தகுதிகளைக் குறித்த பின்னணிக்கு இந்த வார்த்தைகள் சமீபமாக இருப்பதைக் கவனியுங்கள் [பார்க்க, 1 தீமோ. 3:1–7]. அந்தத் தகுதிகளில் ஒன்று அவர் ஆணாக இருக்க வேண்டும் என்பதாகும். மூப்பர்கள் சபையில் ஒழுங்காகப் போதிக்க வேண்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது [பார்க்க, 1 தீமோ. 5:17]. பெண்கள் அமைதியாகப் போதனைகளைப் பெற வேண்டும், சபையில் ஆண்களுக்குப் போதிக்கக் கூடாது, அதிகாரம் செலுத்தக் கூடாது என்பதெல்லாம் சபையின் சரியான ஒழுங்கோடு தொடர்புடையதாகும். ஒரு பெண் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ போதகர்/மூப்பர்/ கண்காணிகளின் பங்கை நிறைவேற்றுவதையே அவர் பொருத்தமில்லாத காரியம் என்று சொல்லியிருக்கிறார்.

இதற்காக மனைவியாகிய பெண், தனது கணவனுக்குக் கீழ்ப்பட்டு, சபைக்கூடுகையில் ஜெபிக்கவோ, தீர்க்கதரிசனம் சொல்லவோ, சபையோடு பகிர்ந்துகொள்ளும்படி ஒரு சிறிய போதனையைப் பெறுவதோ அல்லது பொதுவாகப் பேசுவதோ கூடாது என்று இதற்கு அர்த்தமில்லை. தேவனுடைய ஒழுங்கை மீறாமல் அவள் இந்தக் காரியங்களை வீட்டில் செய்வதுபோல, தேவனுடைய ஒழுங்கை மீறாமல் அவள் இந்தக் காரியங்களைச் சபையிலும் செய்யலாம். அவள் வீட்டில் கணவனுக்கு மேலாக அதிகாரம் செலுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதுபோல, சபையிலும் அவள் கணவனுக்கு மேலாக அதிகாரம் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆண்களைப்போலப் பெண்களும் உதவிக்காரர் பதவியில் ஊழியம் செய்யலாம் என்பதை நாம் பின்னர் பார்க்கிறோம் [பார்க்க, 1 தீமோ. 3:12]. உதவிக்காரராகச் சபையில் சேவை செய்யும்போது, அது கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலான தெய்வீக ஒழுங்கை மீறுவதாக இருக்காது.

1 தீமோத்தேயு 2:11–14 வசனங்களிலுள்ள பவுலின் வார்த்தைகளைப் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய போதனைகளுக்கு இசைவாக்க இது ஒன்றே வழியாகும். தேவன் பெண்களைப் பயன்படுத்துவது குறித்து நாம் பார்த்த மற்ற எடுத்துக்காட்டுகளில் எதுவுமே சபையைப்போலக் குடும்பத்துக்கான மாதிரியாக இருக்கவில்லை. எனவே எதுவும் தேவனால் நிறுவப்பட்ட ஒழுங்கை மீறவில்லை. எதிலும் நாம் ஒரு குடும்பச் சூழ்நிலையில் மனைவிமார் கணவன்மாருக்கு எதிராக அதிகாரத்தைச் செலுத்துவதற்கான பொருத்தமில்லாத மாதிரியை நாம்





காணவில்லை. மறுபடியுமாக, ஒரு வீட்டில் பல குடும்பங்கள் ஒன்றாகக் கூடியிருப்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அப்போது மனைவி பொறுப்பை ஏற்றுக்கொண்டு போதிக்கிறாள், கண்காணிக்கிறாள். அவளுடைய கணவனோ அமைதியாக அமர்ந்திருந்து, அவளுடைய அதிகாரத்துக்குத் தன்னைக் கீழ்ப்படுத்துகிறான். இப்படிப்பட்ட ஒரு காரியமே குடும்பத்தைக் குறித்த தேவனுடைய ஒழுங்குக்கு விரோதமாக இருக்கிறது.

என்றாலும், தெபொராள் இஸ்ரவேலருக்கு நியாயாதிபதியாக இருப்பதிலும், அன்னாள் கிறிஸ்துவைக்குறித்து ஆண்களுக்குச் சொல்லுவதிலும், மரியாளும் அவளோடு இருந்தவர்களும் கிறிஸ்து உயிர்த்தெழுந்த செய்தியை அப்போஸ்தலர்களுக்குச் சொல்லுவதிலும் குடும்பத்தைக் குறித்த தேவனுடைய ஒழுங்கு மீறப்படவில்லை. ஆனால் ஒரு ஒழுங்கான சபைக் கூடுகையில் பெண்/மனைவி அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, ஆண்/கணவனுக்குப் போதிக்கும் போது இந்த ஒழுங்கு மீறப்படலாம் என்ற தவறான செய்தியை அது கொடுப்பதற்கு ஏதுவாகிறது.

### முடிவுரை

''பெண்கள் ஊழியத்தில் ஈடுபட்டு, மனதுருக்கமுள்ள இருதயத்தோடு தேவனால் கொடுக்கப்பட்டுள்ள வரங்களைப் பயன்படுத்தி, மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் அடிப்படையாக என்ன தவறு இருக்கிறது? அது எந்த நல்லொழுக்கக் கொள்கையை மீறுகிறது?'' என்ற கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ளுவோமானால், ஒரு பெண்ணின் ஊழியம் ஆணுக்கும் பெண்ணுக்கும், கணவனுக்கும் மனைவிக்கும் இடையிலுள்ள உறவைக் குறித்த தேவனுடைய ஒழுங்கை மீறுமானால் அப்போது அது தவறாக இருக்கிறது என்பதை உணர்கிறோம். இந்த இரண்டு ''பிரச்சினைக்குரிய பகுதிகளிலும்'' பவுல் திருமணம் குறித்த தேவனுடைய ஒழுங்கையே தனது போதனைக்கு அடிப்படையாகக் கொள்ளுகிறார்.

எனவே பெண்கள் ஒரு சிறிய அளவிலேயே ஊழியத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்கிறோம். வேறு பல வழிகளில் தேவன் பெண்களைத் தமது மகிமைக்காகப் பயன்படுத்த விரும்புகிறார், அப்படியே அவர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் செய்துகொண்டும் வருகிறார். தேவனுடைய ராஜ்யத்துக்குப் பெண்கள் கொடுத்த ஆக்கபூர்வமான பங்களிப்புகளில் ஒருசிலவற்றை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இயேசுவின் நெருங்கிய நண்பர்களில் சிலர் பெண்களாக இருந்தார்கள் என்பதையும் [பார்க்க, யோவான் 11:5], பெண்கள் பொருளாதாரரீதியாக அவருடைய ஊழியத்துக்கு ஆதரவளித்தார்கள் என்பதையும் [பார்க்க, லூக்கா 8:1–3] நாம் மறந்துவிடக்

கூடாது. சமாரியப் பெண் தனது பட்டணத்திலுள்ள ஆண்களோடு கிறிஸ்துவைக் குறித்த செய்தியைப் பகிர்ந்துகொண்டாள், பலர் அவரை விசுவாசித்தார்கள் [பார்க்க, யோவான் 4:28–30, 39]. ‘‘தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி ... நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துவந்தாள்’’ என்று நாம் வாசிக்கிறோம் [அப். 9:36]. ஒரு பெண்ணே அடக்கத்துக்காக இயேசுவை அபிஷேகம் செய்தாள். பல ஆண்கள் அதைக்குறித்துக் குறைசொல்லியபோது இயேசு அவளைப் பாராட்டினார் [பார்க்க, மாற்கு 14:3–9]. இறுதியாக, இயேசுவானவர் எருசலேம் வழியாகச் சிலுவையைச் சுமந்து சென்றபோது, பெண்களே அழுது கண்ணீர் வடித்தார்கள் என்றும் நாம் வாசிக்கிறோம். ஆண்களைக் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. இவைகளும் இன்னும் பல எடுத்துக்காட்டுகளும் பெண்கள் எழுந்து, தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றும்படி அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் எல்லோருமே நமக்குத் தேவைப்படுகிறார்கள்!





## 13

# விவாகரத்தும் மறு திருமணமும்

விவாகரத்தையும் மறுதிருமணத்தையும் குறித்து உண்மையுள்ள கிறிஸ்தவர்களின் மத்தியில் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது. இரண்டு அடிப்படையான கேள்விகளே விவாதத்தைத் தூண்டுகின்றன: 1] தேவன் விவாகரத்தை அனுமதிக்கிறாரா? அப்படியானால் எப்போது அதை அனுமதிக்கிறார்? 2] தேவனுடைய பார்வையில் மறுதிருமணம் எப்போது அனுமதிக்கப்படுகிறது? எதை அனுமதிப்பது, எதை அனுமதிப்பதில்லை என்பதைக் குறித்துப் பெரும்பாலான சபைப்பிரிவுகளும், தனிப்பட்ட சபைகளும், வேதவசனங்களுக்குத் தாங்கள் அர்த்தம் காணுவதின் அடிப்படையில் அதிகாரபூர்வமான கோட்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய உறுதிப்பாடுகள் தேவன்மீதான அன்பினால் தூண்டப்பட்டிருக்குமானால், அவர்களுடைய உறுதிப்பாடுகளுக்காகவும், அவைகளுக்கேற்றபடி அவை நடப்பதற்காகவும் அவைகளை மதிக்கிறோம். என்றாலும் நாம் எல்லோரும் 100 சதவீதம் வேதாகமரீதியான உறுதிப்பாட்டைக் கொண்டிருப்பது நல்லதாகும். தேவனுடைய நோக்கத்துக்குக் குறைவுபடும் ஒன்றைச் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் போதிக்கக் கூடாது. மக்கள் சுமக்க வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டிராத பாரங்களை அவர்கள் மக்களின்மீது சுமத்தவும் கூடாது. இந்த இலக்கைக் கருத்தில்கொண்டு கருத்து வேறுபாடுகள் அதிகமாகக் காணப்படும் இந்தக் கருப்பொருளைக் குறித்த வேதவசனங்களுக்கு என்னால் முடிந்த வரை சிறப்பாக அர்த்தம்காணப் போகிறேன். ஒப்புக்கொள்ளுவதா வேண்டாமா என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும்.

உங்களைப்போலவே நானும் உலகத்தில் இப்போது விவாகரத்துக்கள் பெருகிவருவதைக் குறித்து அதிகமாக வேதனைப்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கிறிஸ்தவர்களாக அறிக்கையிடுகிறவர்களும், ஊழியத்தில் இருப்பவர்களும் விவாகரத்துச் செய்வது